

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 14.1.2025 அன்று முகாம் அலுவலகத்தில், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் அமைச்சர் பெருமக்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| | மதுரா செந்தில்<br>அதிரடி அல்தாப் |
| சங்கரன்கோயில் – | கவிஞர் தமிழ்தாசன்<br>ஈ. ராஜா, எம்.எல்.ஏ.,<br>டாக்டர் கலை கதிரவன் |
| எழும்பூர் – | செந்தலை கவுதமன்<br>மாண்புமிகு பி.கே. சேகர்பாபு<br>செங்கை தாமஸ் |
| உடுமலைபேட்டை – | இரா. இராஜீவ்காந்தி<br>இல. பத்மநாபன்<br>சேலம் கோவிந்தன் |
| கம்பம் – | காசி முத்து மாணிக்கம்<br>நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,<br>சிங்கை பிரபாகரன் |
| கும்மிடிப்பூண்டி – | கவிஞர் மனுஷ்யபுத்திரன்<br>டி.ஜெ.எஸ்.கோவிந்தராஜ், எம்.எல்.ஏ.,<br>தமிழ்க்கொண்டான் |
| ஆரணி – | கரூர் முரளி<br>எம்.எஸ். தரணிவேந்தன், எம்.பி.,<br>பேரணாம்பட்டு<br>இராஜேந்திர பிரசாத் |
| துறையூர் – | நந்தனம் நம்பிராஜன்<br>காடுவெட்டி நா. தியாகராஜன், எம்.எல்.ஏ.,<br>சாவல்பூண்டி மா. சுந்தரேசன் |
| மேலூர் – | முனைவர் பொன்னேரி சிவா<br>மாண்புமிகு பி. மூர்த்தி<br>வயலூர் கிருஷ்ணமூர்த்தி |
| மேட்டூர் | வேலூர் கென்னடி<br>டி.எம். செல்வகணபதி, எம்.பி.,<br>நெய்வேலி தங்கம்<br>லயோலா ராஜசேகர் |
| மார்த்தாண்டம் | பெருநற்கிள்ளி<br>த. மனோ தங்கராஜ், எம்.எல்.ஏ.,<br>ஆலங்குளம் மரியராஜ் |
| தூத்துக்குடி | அத்திப்பட்டு சாம்ராஜ்<br>மாண்புமிகு கீதா ஜீவன்<br>இரம்ஜான் பேகம் |
| திருமயம் | ஆடுதுறை உத்திராபதி<br>மாண்புமிகு எஸ். ரகுபதி<br>ஈகை தனசேகர் |
| உளுந்தூர்பேட்டை – | சைதை சாதிக்<br>தா. உதயசூரியன், எம்.எல்.ஏ.,<br>கம்பம் பாண்டியன் |
| பட்டுக்கோட்டை – | வே. மதிமாறன்<br>க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ.,<br>மதுரை சேவியர் |
| புதுக்கோட்டை – | தஞ்சை கலைமணிபாரதி<br>கே.கே. செல்லபாண்டியன்<br>மங்கலம் பிரபாகரன் |
| தென்காசி – | தமிழ் கா. அமுதரசன்<br>நா. ஜெயபாலன்<br>பூங்காநகர் கண்ணன் |
| விருத்தாசலம் – | சோம. செந்தமிழ்செல்வன்<br>மாண்புமிகு சி.வெ. கணேசன் |
| | வேலூர் இரமேஷ் |
| திருவெறும்பூர் – | சென்னை த. அரங்கநாதன்<br>பரிதி இளம்சுருதி |
| திருச்செந்தூர் – | ஆரூர் மணிவண்ணன்<br>மாண்புமிகுஅனிதாஆர். ராதாகிருஷ்ணன்<br>திருப்பூர் கூத்தரசன் |
| ஒட்டன்சத்திரம் – | தூத்துக்குடி சரத்பாலா<br>மாண்புமிகு அர. சக்கரபாணி<br>ஆம்பூர் தருமன் |
| புதுச்சேரி – | கந்திலி கரிகாலன்<br>புதுவை ஆர். சிவா, எம்.எல்.ஏ.,<br>குடந்தை ராமகிருஷ்ணன் |
| இராஜபாளையம் – | வரகூர் காமராஜ்<br>மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன்<br>கவிஞர் சிவமுத்து வளவன் |
| தஞ்சாவூர் – | வழக்கறிஞர் சிவ. ஜெயராஜ்<br>துரை. சந்திரசேகரன், எம்.எல்.ஏ.,<br>விசார் க. தமிழரசன் |
| மயிலாடுதுறை – | நாத்திகம் நாகராசன்<br>நிவேதா எம். முருகன், எம்.எல்.ஏ.,<br>பொள்ளாச்சி சித்திக் |
| உதகை – | பவானி கண்ணன்<br>பா.மு. முபாரக்<br>திருப்பூர் ரஜினி செந்தில்<br>கோவை வில்லவன் |
| திருமங்கலம் – | சேலம் சுஜாதா<br>மு. மணிமாறன்<br>பழனி அப்பாஸ்<br>கடையநல்லூர் இஸ்மாயில் |
| கோபிசெட்டி –பாளையம் | போடி காமராஜ்<br>என். நல்லசிவம்<br>குடியாத்தம் அன்பு<br>ஜெ. வீரமணி |
| அண்ணாநகர்– | பசும்பொன் இரவிச்சந்திரன்<br>நே. சிற்றரசு<br>க. எழிலன் |
| காரைக்கால்– | கோவி. லெனின்<br>எச். நாஜிம்<br>ஆலங்குடி செல்வராஜ் |
| பெரியகுளம்– | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி<br>தங்க. தமிழ்செல்வன், எம்.பி.,<br>கு. வாஞ்சிநாதன் |
| மன்னார்குடி– | மதுரை அலெக்சாண்டர்<br>திருப்பூர் மனோகர்பாபு<br>மன்னை த. சோழராஜன் |

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18

### குவைத் தி.மு.க. அயலக அணி சார்பாக

# மிக இளம் வயது உலக சதுரங்கச் சாம்பியன் சர்வாணிகாவுக்கு 'இளம் சாதனையாளர்' விருது!

## சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் வழங்கப்பட்டது!

குவைத், ஜன. 18-
குவைத் நாட்டில் உலக சதுரங்க சாம்பியன் சர்வாணிகாவுக்கு தி.மு.க., அயலக அணி சார்பில் "இளம் சாதனையாளர்" விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

குவைத் நாட்டில் நடைபெறுகின்ற மாபெரும் FIDE RATED OPEN CHESS TOURNAMENT களில் ஆசியாவின் மிக இளம் வயது WOMEN CANDIDATE MASTER, உலக சதுரங்க சாம்பியன் அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் ஆசியாவின் மிக இளம் வயது WCM சர்வாணிகா (வயது9) இந்தியா சார்பில் வயது வரம்பற்றோர் பிரிவில் கலந்து கொண்டு விளையாட குவைத் நாட்டிற்கு வந்துள்ளார்.

இதற்கு முன்னதாக பிரான்ஸ் நாட்டில் புதிய சாதனை படைத்து சதுரங்க வரலாற்றில் புதிய மைல் கல்லை எட்டினார் சர்வாணிகா. பிரான்ஸ் நாட்டில் Annemasseயில் நடைபெற்ற மாபெரும் FIDE RATED OPEN சதுரங்க போட்டிகளில், இந்தியா சார்பில் விளையாடி 43 (POINTS) புள்ளிகளைப் பெற்று மிக இளம் வயதில் 2049 (Elo Points) புள்ளிகளை சேர்த்து சர்வாணிகா புதிய சாதனை படைத்துள்ளார்.

மேலும் இந்தியாவில் GM வைஷாலி 12 வயதிலும், IM&WGM வன்டிகாஅகர்வால் 12 வயதிலும், IM&WGM திவ்யா தேஷ்முக் 11 வயதிலும் 2000 புள்ளிகளை கடந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுமி சர்வாணிகாவை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கிணங்க, கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி. எம்.பி. செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா. எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நமது கழக அயலக அணி சார்பில் நேரில் சந்தித்து இளம் வயதில் பல சாதனைகள் புரிந்து வரும் சர்வாணிகா வுக்கு தி.மு.க. அயலக அணி குவைத் சார்பாக திமுக அயலக அணியின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் "இளம் சாதனையாளர்" எனும் விருது வழங்கி சிறப்பிக்க ப்பட்டது.

அப்போது பேசிய சிறுமி சர்வாணிகா தன்னை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டியதை நினைவு கூர்ந்து பெருமிதம் கொண்டார். மேலும் தனது வெற்றிக்கு மிகவும் உறுதுணையாய் இருப்பது தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "திராவிட மாடல் அரசு" என்றும், தான் ஒவ்வொரு முறை வெற்றி பெற்று செல்லும் போதும் தமிழகத்தின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தன்னை பாராட்டி தனக்கு எப்பொழுதும் உறுதுணையாய் இருக்கின்றார் என்று மகிழ்வுடன் கூறினார்.

மேலும் தான் வெற்றி பெறும் போதெல்லாம் தமிழ்நாடு அரசு தனக்கு செய்யும் உதவிகளையும் நினைவு கூர்ந்தார். சதுரங்க போட்டி மட்டுமல்லாது படிப்பிலும் தான் சுட்டி ஒவ்வொரு தேர்விலும் முதல் மதிப்பெண் எடுத்து வருகிறேன் என பெருமையுடன் கூறினார். அது சமயம் அவரது தாயார் திருமதி அன்பு ரோஜா சரவணன் அவர்களும் உடன் இருந்தார்.

இந்நிகழ்வில் திமுக அயலக அணி குவைத் மண்டலத்தின் அவைத்தலைவர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, கிழக்கு மண்டல அமைப்பாளர் குடந்தை சி.தியாகராஜன், தொழிலாளர் நல அணி செயலாளர் திருவிடத்தினூர் ஏ.எஸ்.முகமது ரபிக், இளைஞரணி துணைச் செயலாளர் உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன், பொறியாளர் அணி செயலாளர் மருதூர் பிரேம் குமார், மகளிர் அணி துணைச் செயலாளர் தஞ்சை சாந்தி பாலசுப்பிரமணியன், திருச்சி சௌமியா சுரேஷ்குமார். உடையார் பாளையம் செந்தில்குமார், கூத்தாநல்லூர் சாகுல் ஹமீது ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தினை ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து பெரியார் நகர் பகுதியில் கள்ளுக்கடை மேடு, ஓடைப்பள்ளம் ஆகிய இடங்களில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி வாக்கு சேகரித்தார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவக்குமார், மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், பெரியார் நகர் பகுதிக் கழகச் செயலாளர் அக்னி டி.சந்திரசேகர், கே.சந்திரசேகர், அயூப், மாமன்ற உறுப்பினர் பிரவீனா உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரித்தனர்.

### சென்னையில் தொடர்ந்து 3வது ஆண்டாக பன்னாட்டு புத்தகத் திருவிழா!

# தமிழ்நாடு அரசு சாதனை! எழுத்தாளர்கள் பாராட்டு!

## செம்மொழிக்குப் பெருமை சேர்த்திருப்பதாக புகழாரம்!

சென்னை, ஜன. 18-
சென்னையில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக பன்னாட்டு புத்தகத் திருவிழாவை நடத்தி தமிழ்நாடு அரசு சாதனை நிகழ்த்தியிருக்கிறது.. வேறு எந்த மாநில அரசும் கைக்கொள்ளாத முன்னெடுப்பு என்றும், செம்மொழிக்கு தமிழ்நாடு அரசு பெருமை சேர்த்திருப்பதாகவும் எழுத்தாளர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ள சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் "உலகைத் தமிழுக்கும் தமிழை உலகுக்கும் கொண்டுசெலுதல்" என்கிற உயரிய நோக்கத்துடன் நடத்தப்பட்டு வருகிறது. சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சிக்கு இது வெற்றிகரமான மூன்றாம் ஆண்டு. 2023ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில் 24 நாடுகள் பங்கேற்றன. 2024ம் ஆண்டில் 40 நாடுகள் பங்கேற்றன. இந்த ஆண்டு 60க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வெளிநாட்டுப் பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய முகவர்கள் பங்கேற்றுள்ளனர்.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்று வரும் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவில், ஆயிரம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன. தமிழில் இருந்து பிற மொழிகளுக்கு மொழியாக்கம் செய்யப்பட்ட 30 நூல்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட உள்ளார். தமிழ்நாடு அரசின் முன்னெடுப்பில் மூன்றாவது பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டுவருகிறது. வேறு எந்த ஒரு மாநில அரசும் கைக்கொள்ளாத முன்னெடுப்பு என்று காலச்சுவடு பதிப்பாளர் கண்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார். தமிழ்ப்படைப்புகளை உலகுக்கு எடுத்துச் செல்வதும், தமிழ்ப் பதிப்புலகை உலகச்சூழலோடு இயைந்து இயங்கச் செய்வதுமே பன்னாட்டு புத்தகத் திருவிழாவின் நோக்கமாக உள்ளது. தமிழ்நாடு அரசின் பண்பாட்டு முன்னெடுப்புகள் தமிழ்க்கொடியை உயரப் பறக்கவிடும் காலம் இது.

இந்த முயற்சி வெற்றி பெறுவது தமிழ் இலக்கியத்தின், பதிப்புலகின் வெற்றியாகவே அமையும் என்று எழுத்தாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். டெல்லியிலும், கொல்கத்தாவிலும் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சிகள் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்தாலும், மொழிபெயர்ப்பு உரிமைகள் சார்ந்து வழிகாட்டுவது அந்த நிகழ்வுகளின் ஒரு பகுதி மட்டும்தான். மாறாக, சென்னையில் நடைபெற்று வரும் பன்னாட்டு புத்தகக் கண்காட்சி, மொழிப் பெயர்ப்பையும் அதற்கான உரிமைகளைப் பெறுவதையும் முதன்மை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகிறது. அந்த வகையில் தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் பன்னாட்டுப் புத்தகக் காட்சி, இந்திய அளவில் முன்னுதாரணம். தமிழ் நூல்களை உலக மொழிகளுக்குக் கொண்டுசெல்வதும், பிற மொழி நூல்களை தமிழுக்குக் கொண்டுவருவதுமே இதன் நோக்கம். ஒரு மாநில அரசு இந்த முன்னோடி முயற்சியில் ஈடுபட்டிருப்பது உண்மையிலேயே நம் செம்மொழிக்குப் பெருமை சேர்க்கக்கூடியது என்று எழுத்தாளர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

### தி.மு.க. ஆட்சியில்தான் – ஆத்தூர் தொகுதியில்

# கிராமங்களின் குடிதண்ணீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது!

## ஆலமரத்துப்பட்டியில் – அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

ஆத்தூர், ஜன.18-
தி.மு.க. ஆட்சியில் தான் ஆத்தூர் தொகுதியில் கிராமங்களின் குடிதண்ணீர் பிரச்சனை தீர்த்து வைக்கப் பட்டுள்ளது என்று ஆலமரத்துப்பட்டியில் நடைபெற்ற புதிய குடிதண்ணீர் திட்ட திறப்பு விழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் ஆலமரத்துப்பட்டி ஊராட்சி ஊராட்சியில் கனிம வள நிதி ரூபாய் 20 லட்சம் மதிப்பில் ரெங்கநாதபுரத்தில் இருந்து குழாய் மூலம் கொண்டு வந்து ஆலமரத்தில் உள்ள தரைதளம் தொட்டியில் நிரப்பி அதன் மூலம் குடிதண்ணீர் எடுத்து பொதுமக்களுக்கு வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடராஜன், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஷ்வரி முருகேசன், முன்னாள் மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் பத்மாவதி, கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் முருகேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் அருள்கலாவதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம் வரவேற்றார். விழாவில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திமுக ஆட்சியில் தான் கிராமங்களுக்கான குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. ஆத்தூர் தொகுதியில் காமராஜர் நீர்தேக்க குடிதண்ணீர் விரிவாக்கம் பேரணை மூலம் குடிதண்ணீர், காவேரி கூட்டு குடிநீர் திட்டங்கள் உட்பட பல்வேறு குடிதண்ணீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் இன்று கிராமங்களில் 100சதவீதம் குடி தண்ணீர் பஞ்சம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. இதுபோல வீடுகள் இல்லாத ஏழை மக்களுக்கு கிராம ஊராட்சிகள் மூலம் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகள் வழங்கப்பட்டதால் இந்த ஆண்டு மட்டும் குறிப்பாக ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் 2700 குடும்பங்களுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் வழங்கப்பட்டு வருகிறது. வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகம் பேருக்கு வீடுகள் வழங்க கழகத்தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் முதல்வர் முக.ஸ்டாலின் அவர்கள் வழங்கத் தயாராக உள்ளார். குடிசை இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதுதான் முதல்வரின் முதல் திட்டமாக உள்ளது" என்றார். எப்போது தேர்தல் வந்தாலும் ஆதரவாக இருப்பவர்கள் ஆலமரத்துப்பட்டி ஊராட்சி மக்கள்தான் அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன் என்றார்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் ராஜேந்திரன், வசந்தாமேரி, எம்.சி. பாண்டியன், பொருளாளர் ஜாதிக்கவுண்டன்பட்டி கருப்பையா, அவைத்தலைவர் சிவக்குமார், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், அரசு ஒப்பந்தகாரர்கள் பஞ்சம்பட்டி ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக ஊராட்சிச் செயலாளர் தண்டபாணி நன்றி கூறினார்.



முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சியின் மூலம் இராமநாதபுரம் மாவட்ட வட்ட ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக கட்டடத்தை திறந்து வைத்ததையொட்டி இராமநாதபுரத்தில் ரூ. 4.44 கோடி மதிப்பீட்டில் இரண்டு தளங்கள் கொண்ட புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த தொழிலாளர் நல துறை அலுவலகத்தில் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் உட்கட்டமைப்பு வசதிகளை பார்வையிட்டார். உடன் கே.நவாஸ்கனி, செ.முருகேசன், சுப்பிரமணியன், ஆர்.கே. கார்மேகம், பிரவீன் தங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர்.